

நகர் ஊரமைப்புத்துறை – கடலூர் மாவட்டம்.

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம் , கடலூர் ஊராட்சி ஒன்றியம், கிளிஞ்சிகுப்பம் கிராமம், சர்வே எண்கள்:**11/3A1**.-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண் : **2IQKW3DM/2025/TCP**

அளவு: 1 அங்குலம் 66 அடி (1:800)

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்த பரப்பு : **1.90 ஏக்கர் (7677.00 ச. மீ)**

மனைப்பிரிவு எல்லை

நிலையிலுள்ள சாலை

பொது ஒதுக்கீடு

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

உள்ளாட்சிக்கு (A) : 38.84 ச. மீ (0.65%)

மின்சாரதுறைக்கு (B) : 39.07 ச. மீ (0.65%)

அரசாணை எண் 18-ன், நகராட்சி (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் **04.02.2019**-ன் படி பூங்காவிற்கான அரசு வழிகாட்டி மதிப்பின்படி தொகையை மனுதாரால் செலுத்தப்பட்டுள்ளது.

கட்டிட வரம்பு

7.20மீ., 10.0மீ. மற்றும் 12.0மீ. சாலைகளுக்கு 1.5மீ. விடப்பட வேண்டும்.
15.0மீ. மற்றும் 18.0மீ. அகல சாலைகளுக்கு 4.5மீ. விடப்பட வேண்டும்.

மூலை மடக்கு

7.20மீ., 10.0மீ. மற்றும் 12.0மீ. சாலைகளுக்கு 1.5மீ. x 1.5மீ. விடப்பட வேண்டும்.
12.0மீ. அகல சாலைக்கு மேல் 4.5மீ. x 4.5மீ. விடப்பட வேண்டும்.
30.5மீ. அகல சாலைக்கு மேல் 6.0மீ. x 6.0மீ. விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்

1. இம்மனைப்பிரிவிற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் அனுமதி ஒப்புதல் வழங்கும் முன் இடம் எந்தவொரு நில ஆர்ஜிதத்திற்கும் உட்படவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதம் பட்டியல் மாவட்ட வருவாய்த்துறை அலுவலரிடம் அனுப்பப்படவில்லையென உறுதி செய்து கொள்ளவேண்டும் .

2. அரசாணை எண் 71, வீ. வ. துறை (ம) நாள் 16. 06. 2003-ன் படி பூங்கா(ம) சாலை ஒதுக்கீடுகளை உள்ளாட்சியின் தானமாக பெற்றுக்கொண்டு பராமரிக்கப்பட வேண்டும் என்றும் நில உரிமை குறித்து உள்ளாட்சியே முடிவு பொறுப்பு என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது .

3. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (எ) மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்புஆணையர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

4. இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவின் மனைகள் வாங்கும் ஒவ்வொருவருக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும் .

5. இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்பந்தப்பட்ட இடத்தில் 5' X 5' என்ற அளவிற்கு குறையாமல் கான்கிரீட் தகவல் பலகையில் நிரந்தரமாக வரைந்து வைக்கப்பட வேண்டும்.

6. அரசாணை எண்: 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்: 04. 02. 2019 -ன் படியான தமிழ்நாடு ஒருங்கிணைந்த (ம) கட்டிட விதிகளின் படி பொது ஒதுக்கீட்டிற்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The prometer has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

8. நகர் ஊரமைப்புத் துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பெயரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையபத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் மேற்கொள்ளப்படுவதாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு ஏதேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தில் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

இணையதள விண்ணப்ப எண் : **2IQKW3DM**

ம. வ / ந. ஊ. உ. இ. (க . மா) எண்: **04/2026** (இணையதள ஒப்புதல்)

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கடலூர் மாவட்டம்

/உதவி வரைவாளர் | வரைவாளர் நிலை – III | மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை – II

Signature valid
Signed by: Assistant ...
Location: Cuddalore
Date: 2026.01.20

Signature valid
Signed by: Village Panchayat President
Location: Cuddalore
Date: 2026.01.15

Scanned with OKEN Scanner